TAMIL CATHOLIC ASSOCIATION OF VICTORIA, AUSTRALIA
விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம், ஆஸ்திரேலியா

# Messenger
# தூதுவன்

கிறிஸ்மஸ் வெளியீடு / December 2023

https://australiantamilcatholics.com.au / tcavinfo@gmail.com



# ஞானத் தந்தையின் செய்தி

**Merry Christmas**

## இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே!

பிறக்கவிருக்கும் பாலகன் இயேசுவின் அன்பும், அமைதியும், உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

சில பிறப்புக்கள் வரலாற்றை உருவாக்கியிருக்கின்றன, சில பிறப்புக்கள் வரலாற்றை அழித்திருக்கின்றன. சில பிறப்புகள் வரலாற்றை அதிர்ச்சியடைய வைத்திருக்கின்றன, சில பிறப்புகள் வரலாற்றை ஆச்சரியப்பட வைத்திருக்கின்றன. சில பிறப்புக்களால் உலகம் வாழ்ந்திருக்கின்றது, சில பிறப்புகனால் உலகம் வீழ்ந்திருக்கின்றது. எல்லா பிறப்புக்களும் வரலாற்றில் நிகழ்ந்தி ருக்கின்றன, சில பிறப்புகளால் வரலாறே நிகழ்ந்திருக்கின்றது. பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என்ற புதிய சகாப்தத்தை உருவாக்கியது நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு. கிறிஸ்து பிறப்பதற்கு முன் கிறிஸ்து பிறப்பதற்குப் பின் என்று வரலாற்றை இரண்டாகப் பிரித்திருக்கிறது நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு. நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவினுடைய பிறப்புப் பெருவிழா நல் வாழ்த்துக்களை உங்கள் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியோடு உரித்தாக்குகின்றேன்.

மார்கழி இருபத்தைந்தாம் நாள் மகிமையின் கீதம் மண்ணில் மலர்ந்த நாள். இறைவனால் ஆகாதது எதுவுமில்லை என்பது உறுதி செய்யப்பட்ட நாள். தந்தையாகிய இறைவனின் பெருமையும், புகழும், மகிமையும் நிலைநாட்டப்பட்ட நாள். மண்ணுலகை அன்புசெய்வதை உறுதிப்படுத்த தந்தை தன் மகனையே இவ் உலகிற்கு உவந்தளித்த நாள்.

மீண்டும் ஒரு காலம், கிறிஸ்து பிறப்பின் காலம் விண்ணக வேந்தன் மண்ணில் பிறந்த காலம். விண்ணகம் மண்ணகத்தை சந்தித்த காலம். கடவுள் மனிதனைச் சந்தித்ததை "பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி" என்று திரு விவிலியம் எடுத்துக் கூறுகின்றது. வானதூதர்கள் இடையர்களுக்குக் கூறும் வார்த்தையில் நாம் இதனைக் காண்கின்றோம். "இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்." (லூக்கா 2:10)

கடவுள் மனிதனைச் சந்தித்த இந்த அற்புதமான விழா நமக்கு ஓர் ஆழமான செய்தியைத் தருகின்றது. அதாவது நாமும் மற்றவர்களைச் சந்திக்க வேண்டும், தேவையில் இருக்கும் மனிதர்களை, முதுமையில், தனிமையில் இருக்கும் மனிதர்களை நாம் சந்திக்க வேண்டும். இத்தகைய சந்திப்புக்களை நாம் மேற்கொள்ளும் போது சக மனிதர்கள் வாழ்வில் நாம் மகிழ்வை, புன்னகையை ஏற்படுத்துகிறோம். அதன் வழியாக நாமும் மகிழ்வடைகிறோம்.

வாக்கு மனிதனானார். நம்மிடையே குடிகொண்டார். (யோவான் 1:14) என்ற யோவான் நற்செய்தியாளருடைய வார்த்தைகள் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து நம்மைத் தேடி வந்ததை, நம்மை நாடி வந்ததை, நம்மோடு இருப்பதை வெளிப்படுத்துகிறது. எம்முடைய எல்லா சூழ்நிலைகளிலும் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற உண்மையைத் தெளிவு படுத்துகின்றது.

மலர்கின்ற புதிய ஆண்டில் மன நிறைவும் உள அமைதியும் பெற்று வாழ, இறை ஆசீருடன் கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். பிறக்கவிருக்கும் பாலகன் இயேசு உங்கள் அனைவரையும் தம் ஆசீரால் நிரப்புவாராக.

**அருட்பணி அன்ரன் ஆசீர்வாதம்பிள்ளை**

**தமிழ் ஆன்மீகப் பணியகம்**

**மெல்போன் - அவுஸ்ரேலியா**



## இறையேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே!

இறைமகன் இயேசு மானுடல் எடுத்து மண்ணகம் பிறந்த இந்த மகத்தான நாளை நினைவுகூர்ந்து கொண்டாடி மகிழும் நாம், மன்னவன் எம் இல்லங்களிலும் உள்ளங்களிலும் அன்பில் நிலைத்திருக்க வேண்டும் என இந்த கிறிஸ்து பிறப்பு நன்னாளில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்.

விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கமானது தொடர்ந்தும் பல சமய மற்றும் சமூக கலாச்சார மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருவதோடு அதனை வழிநடத்தும் எமது அருட்தந்தை அன்டன் புனிதகுமாருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எமது சங்கத்தோடு இணைந்திருக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்தும் எம்மோடு இணைந்து சங்க வளர்ச்சியில் பற்கேற்குமாறு அன்புடன் அழைக்கிறேன்.

இந்த மகத்தான நாளினை முன்னிட்டு நடக்கவிருக்கும் “ஒளி விழா” கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று நிகழ்ச்சியை சிறப்பிக்கவிருக்கும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சிரமம் பாராது பல உதவிளை செய்துவரும் அனைவருக்கும், நன்கொடைகள் மற்றும் விளம்பரங்கள் மூலம் உதவிய நல் உள்ளங்களுக்கும், சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறைமகன் இயேசு எமது வாழ்வை முழுமையாக வழிநடத்தவும், அவரின் பிறப்பை கொண்டாடும் எம்மை அன்பிலும் சமாதானத்திலும் நிலைத்திருக்கவும் வேண்டுமென இந்த கிறிஸ்து பிறப்பு நாளில் வாழ்த்துவதோடு மலரவிருக்கும் புதுவருடம் இன்பம் பொங்கிய நல்லாண்டாக மலரவேண்டும் எனவும், எதிர்கால திட்டங்கள் யாவும் முழுமையாக நிறைவேற வேண்டும் எனவும் மனமார வாழ்த்துகிறேன்.

நன்றி.
என்டனி ராஜ்குமார் சூசை
தலைவர் - விக்டோரியா தமிழ் கத்தோலிக்க சங்கம்

Merry Christmas

# Briget Cabinet Pty Ltd

- Kitchen
- Vanities
- Wardrobes
- Laundries





George
Phone: 0451 966 177
Email: brigetcabinet@gmail.com
29 Tatterson Road,
Dandenong South
VIC 3175



# *Nick Canisius Accounting*

- **Individual, Company, Trust and partnership tax returns**
- **Self-Manage super fund (SMSF) Year End Report, Audit and Tax Return**
- **BAS Lodgement**
- **ABN, GST and Company Registration**
- **Any other accounting and tax needs**

**Contacts:**

Mr Gnanasooriyar Canisius (Nick)
Phone: 0431780348
E-Mail: nickcanisius@gmail.com

Tax Agent
26193199

Certified practising accountant (CPA)
Registered Tax Agent
Registered ASIC Agent


# நத்தார் தாத்தா



நத்தார் என்றால் நத்தார் தாத்தா தான் ஞாபகத்திற்கு வருவார். அவர் வந்தால் நாங்கள் விரும்பும் பரிசும் கிடைக்கும் தானே?. நத்தார் தாத்தா என்றால் பெரிய வயிறு, வெள்ளை தாடி, மீசை சிவப்பு ஆடை தான் எங்கள் அனைவருக்கும் நினைவுக்குவரும். சில இடங்களில் அவரை ஒரு கோமாளியாகவும், விளம்பரமாகவும் காட்டுகிறார்கள்.

# இவர் யார்?

நான்காம் நூற்றாண்டில் துருக்கி நாட்டில் மிரா என்ற நகரில் வறிய குடும்பத்தில் பிறந்தவர் தான் புனித நிகிலாஸ். எங்கள் நத்தார் தாத்தாவிற்கு. ஏழைகளுக்கு உதவுவது என்றால் மிகவும் பிடிக்கும். தனது உணவை ஒறுத்து ஏழைக் குழந்தைகளுக்கு பரிசுகள் வாங்கி அவர்களுக்கு தெரியாமலே வீட்டு வாசலில் வைப்பதில் மகிழ்ச்சி அடைந்தார். பெற்றோர் வறுமையின் காரணமாக தமது பிள்ளைகளை அடிமைகளாக விற்க முற்படும் போது அப் பெற்றோருக்கு பண உதவி கொடுத்து சிறுமிகளை பாதுகாத்தார். பண உதவி தேவைபட்டவர்களுக்கு ஜன்னல் வழியாக எறிவார் அது Chimney அருகில் உலர்வதற்காக வைக்கப்பட்டிருந்த கால் சப்பாத்துகளினுள் விழும். இதனை அவர்கள் எடுத்து மகிழ்வார்கள்,.





இவர் Philosophy மாணவனாக இருந்து ஆயராகியது ஓர் சுவையான சம்பவம். மீரா நகர் ஆயர் இறந்த பின்பு, புதிய ஆயரை தெரிந்து எடுக்க எல்லா ஆயர்களும் ஒன்று கூடினர். அப்பொழுது ஓர் ஆயர் தான் ஒரு காட்சி கண்டதாகவும் அதில் நாளை நிக்கலஸ் என்ற பெயருடன் ஆலயத்துக்கு வரும் முதல் மனிதனை ஆயராக்கும் படி கண்டதாக கூறினார். அதன் படியே புனித நிகிலாஸ் ஆயரானார். 346ஆண்டு மார்கழி 6ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார். இந்த நாள் புனித நிகிலாஸ் அடிகளாரின் நினைவு நாளாக கொண்டாடப்படுகிறது.

**அமலினி சந்திரகுமார்**

# AMR Blinds & Curtains




## Xmas Discount

**30% off**

**Competitive Price**





**Free Measure & Quote**

*#Roller*
*#Sunscreen*
*#Vertical*
*#Roman*
*#Sheer curtains*
*#Plantation*
*And*
*#Pelmets*

**Call on 0420222929, *Rathees***

# நான்காம் ஞானி

அன்பு தப்பி தங்கைகளே இயேசு பாலனைப் பார்க்க ஞானிகள் மூவர் புறப்பாட்டனர். இவர்களுடன் நான்காவதாக இன்னுமொரு ஞானியும் புறப்படடார். அவரை பற்றியதே இந்த கதை.



முதல் மூவரும் முறையே பொன், வெள்ளி. தூபம் என மூன்று பரிசுகளை எடுத்து சென்றனர். நான்காம் ஞானி பாலனுக்காக இரத்தி னங்களை எடுத்து வந்தார். வரும் வழியில் ஒரு மனிதன் பசியால் வாடுவதை கண்ட அவர், அவன் பசியை போக்க தன்னிடம் இருந்த இரத்தினங்களில் ஒன்றை விற்று அவனது பசியை ஆற்றினார். ஆனால் அவ்வேளையில் அவருடன் வந்த மற்றய மூவரும் விண்மீனின் உதவியுடன் வெகுதூரம் சென்று விட்டனர். ஆகவே அவர் இயேசு பாலனை காணத் தொடர்ந்து எருசலேம் நோக்கி பயணம் ஆனார். தனது பயணத்தின் போது இயேசுவுக்காக கொண்டு சென்ற இரத்தினங்களை கொண்டு தேவை பட்டவர்களுக்கு உதவு செய்தார். கடைசியில் எருசலேமை அவர் சென்றடைய 33ஆண்டுகள் எடுத்தன.

அவர் எருசலேமை அடைந்தபோது, எருசலேம் மக்கள் ஒரு மனிதனை கல்வாரி மலைக்கு சிலுவையில் அறைவதற்காக இழுத்து சென்று கொண்டு இருந்தார்கள்.

மக்களோடு மக்களாக அவரும் கல்வாரிக்கு சென்று மீட்பரை பாலனாக பார்க்க வந்தவர் அவர் செய்து கொண்டு வந்த நன்மைகளின் பலனாக மீட்பரை மீப்பாராகவே கண்டார்.

**நீங்கள் எதை விதைக்கிறீர்களோ அதையே அறுப்பீர்கள்.**

**சாந்தி சந்திரகுமார்**



# K.K MEAT

**Contact Kamal**

**0401 088 513**

email: kamalvvt@gmail.com

Taylors Hill & Sunshine Vic









**WE SUPPLY AS FOLLOW:**

- Bush Goat
- Skin on Goat
- Lamb
- Camel
- Buffalo
- Venison Tripe
- Beef
- Lamb Mumbar
- Lamb Tongues
- Lamb Feet
- Mutton Tripe
- Beef Tripe
- Beef Feet
- Beef Small Intestine
- Goat Feet
- Goat Tripe
- Goat Testes
- Goat Head
- Sheep Head
- Sheep Runner
- Sheep Brain


**PACK MEAT ALSO AVAILABLE**

# செபமே பலம்



பிள்ளைகளே, எமது பாப்பரசர் இருபத்தி மூன்றாம், இருபத்தி நான்காம் ஆண்டுகளில், குழுவாகவோ அல்லது தனியாகவோ செபிக்கும்படி அழைக்கிறார்.

அடிக்கடி ‘இயேசுவே உம்மை நேசிக்கிறேன்’ என்று சொல்லுங்கள். படுக்கையை விட்டு எழும்பும் போதும், படுக்க போகும் போதும், வீட்டைவிட்டு விட்டு வெளியே செல்லும்போதும் 1 அல்லது 2 நிமிடங்களாவது செபியுங்கள். முடியாவிட்டால் ‘இயேசுவே உம்மை நேசிக்கிறேன்’ என்றாவது சொல்லுங்கள்.



கிறிஸ்மஸ் பண்டிகை



நத்தார் பண்டிகையானது கிறிஸ்தவ மக்களால் கொண்டாடப்படும் ஒரு புனிதமான நாளாகும். இது கிறிஸ்துவின் பிறப்பை நினைவு கூர்ந்து மகிழ்ச்சியாக கொண்டாடப்பட்டு வருகிறது. இது மக்களுக்கு ஒரு நம்பிக்கை ஊட்டும் விழாவாக இருக்கிறது.

இதற்கு ஆயத்தமாக கிறிஸ்மஸ் மரங்கள் அலங்கரிக்கப் பட்டு மின் விளக்குகள் ஒளிர விடப்படும். பரிசுகள் பரிமாறி மகிழ்வார்கள். இத் தினத்தில் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் உணவு பரிமாறி குதுகளிப்பார்கள்.

இந்த நாளானது அன்பையும், நட்பையும் பகிரும் நாளாகும். நண்பர்கள், உறவினர்கள் வீடுகளுக்கு சென்று ஒருவரை ஒருவர் வாழ்த்தி மகிழ்வார்கள். இது கிறிஸ்துவின் அன்பை பகிரும் ஒரு நாளாகும்.




நத்தார் பாலக இயேசுவின்
பிறந்த நாள்.

பாலராகிய எமக்கு
இனிய நாள்

ஷானியா டேனியல்.

# LAFAYETTE BUILDERS



## ABOUT US

We specialize in residential and commercial projects, offering high-quality workmanship and customer service. Whether you need a home renovation or an extension, we have the skills and expertise to deliver your dream. Contact us today for a free estimate and let us make your dream project a reality.

## OUR SERVICES

- FULL HOME RENOVATIONS
- KITCHEN RENOVATIONS
- BATHROOM RENOVATIONS
- HOME EXTENSIONS
- MODULAR FENCING
- SUNROOM CONVERSIONS
- PERGOLA
- LANDSCAPING



+61 423 122 336
support@lafayettebuilders.com.au
Level 1 Suite 4/695 Burke Rd, Camberwell VIC 3124

# மானிடா - ஒரு நிமிடம்......

நாம் கருவறையில் இருந்த நாள் முதல் எத்தனையோ உறவுகள் வந்து போனாலும் காலச் சூழலினால் உறவுகள் தடம்புரண்டாலும் மாறாத உறவாக நிலைத்திருப்பது இறை - மனித உறவு மட்டும் தான். நண்பா......

**கருவறையில்:-** தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கு முன்பே அறிந்திருந்தேன்: நீ பிறக்குமுன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன் - ஏரேமியா 1-5

**குழந்தைப் பருவத்தில்:-** சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள். மத்தேயு 19:14

**தனிமையில் உனக்காக தோல்வியில்:-** உன்னை நான் ஒருபோதும் மறவேன். உன்னில் நான் இருக்கிறேன். உன்மேல் வெற்றி கொள்ள அவர்களால் இயலாது. ஏனெனில் உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கிறேன். ஏரேமியா 1:19

**கவலையில்:-** உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள். 1பேதுரு 5:7

**துன்பத்தில்:-** உன் துன்ப துயரத்தின் ஆடைகளைக் களைந்துவிடு: கடவுள் உனக்கு அருளும் மாட்சியின் பேரழகை என்றென்றும் ஆடையாக அணிந்துகொள். பாருக் 5:1

**சோதனையில்:-** உங்களுடைய வலிமைக்கு மேல் நீங்கள் சோதனைக்குள்ளாக விடமாட்டார் சோதனை வரும்போது அதைத் தாங்கிக்கொள்ளும் வலிமையை உங்களுக்கு அருள்வார் அதிலிருந்து விடுபட வழி செய்வார். 1கொரிந்தியர் 16:13

**பகைவரின் இடையூரில்:-** தீயவன் உன் நடுவில் இனி வரவே மாட்டான் அவன் முற்றிலும் அழிந்து விட்டான். நாகூம் 1:15

**கண்ணீரில்:-** நீ அழுகையை நிறுத்து: கண்ணீர் வடிக்காதே: ஏனெனில் உனது உழைப்புக்குப் பயன் கிடைக்கும். ஏரேமியா 31:16

**நோயில்:-** நான் உனக்கு நலம் அளிப்பேன்: உன்னுடைய காயங்களை ஆற்றுவேன். ஏரேமியா 30:17

**பலவீனத்தில்:-** வலுவின்மையில்தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும்” 2கொரிந்தியர் 12:9

**அச்சத்தில்:-** அஞ்சாதே, நான் உன்னுடன் இருக்கிறேன்: கலங்காதே, நான் உன் கடவுள், நான் உனக்கு வலிமை அளிப்பேன்: உதவி செய்வேன்: என் நீதியின் வலக்கரத்தால் உன்னைத் தாங்குவேன். எசாயா:41:10

**பாவநிலையில்:-** உன் பாவங்களைப் பனிப்படலம் போலும் அகற்றிவிட்டேன். என்னிடம் திரும்பி வா, நான் உனக்கு மீட்பளித்துவிட்டேன். எசாயா 44:22

**மகிழ்ச்சியில்:-** உன் கடவுள் உன்னில் மகிழ்வார். எசாயா 62:5

**நம்பிக்கையில்:-** நீங்கள் நம்பியபடியே உங்களுக்கு நிகழட்டும். மத்தேயு 9:29.

அன்புள்ளங்களே!

நமது இன்பத்திலும் துன்பத்திலும் உடனிருந்து, நம்மைத் திடப்படுத்தி வலுவூட்டும் இறைவனிடம் நாம் **“இதோ ஆண்டவரின் அடிமை. உமது வார்த்தையின்படி எனக்கு நிகழட்டும்”** என்ற மரியாவைப் போலக் கூறி, நம் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உமது கையில் உள்ளது என்று அவர் கரங்களில் நம் வாழ்வை ஒப்படைத்தால், **இன்று முதல் புதியவற்றையும் நீ அறியாதவற்றையும், நீ அறியாத மறைப்பொருளையும் உனக்கு வெளிப்படுத்துவேன்.** (எசாயா 48:6) **உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உனக்கு ஆசி வழங்குவேன்!**

**நீ ஆசியாய் விளங்குவாய்!** (தொ.நூ 58:8)

உன் ஒளி விடியல் போல் எழும். விரைவில் உனக்கு நலமான வாழ்வுத் துளிர்க்கும். உன் மேல் இன்று நான் விண்ணையும், மண்ணையும் சான்றாக அழைத்து வாழ்வையும், சாவையும், ஆசியையும், சாபத்தையும், உனக்கு முன் வைக்கிறேன். நீயும் உனது வழித் தோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வைத் தேர்ந்துக் கொள் (இச 30:19) என்று கூறி நலமான, வளமான வாழ்வைக் கொடுப்பார். எனவே நாம் அவரில் சரணடைந்து அன்பு கொண்டு நமது அறச்செயல்களை அனைத்தும் அவரில் சமர்ப்பித்து நிலைவாழ்வைப் பெறுவோம். என்றென்றும் நம்மோடு உறவு கொண்டு நிலைவாழ்வை அளிக்கும் இறைவனிடன் சரணாகதி அடைந்து இன்புறுவோம்.

**இறை - மனித - உறவில் சஞ்கமித்து வாழ்வோம்.**

**அனைவருக்கும்கிறிஸ்து பிறப்பு பெருவிழா நல்வாழ்த்துகள்!**

# மனமாற்றத்தின் விழா

நாம் புது வாழ்வு பெற, பாவத்திலிருந்து விடுபட, மனம் மாறி உறவில் வளர்ந்திட இயேசு அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார் (பிலி 2:7).

கடவுள் நிலையில் உரிமை பெற்ற இயேசு தம்மைத் தாழ்த்தினார். அவரின் அன்புப் பரிசு - அன்பின் பகிர்வுதான் கிறிஸ்துமஸ் பெருவிழா.

பாவிகளான நாம் வாழ்வுபெற தம்மையே தாழ்த்தினார் இயேசு, மனம் மாறி தன்னை தாழ்த்தும் எவனும் புதுவாழ்வு பெற முடியும். லூக் 15, 19 கூறும் கருத்துக்கள் மனமாற்றம் மனிதனுக்குத் தேவை என்பதை தெளிவாகக் கூறுகின்றன. எனவே, கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடத் தயார் செய்யும்போது உணவு, உடை, வீட்டின் அலங்காரம் இவற்றைவிட உள்ளத்தை தூய்மையாக்குவோம்.

இயேசு பிறந்த நற்செய்தியை இடையருக்கு அறிவிக்கும் வானதூதர் “உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உண்டாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக” என்று கடவுளைப் புகழ்ந்து பாடி இயேசு பிறந்த செய்தியை இடையருக்கு அறிவித்தனர் (லூக் 2:14). இயேசுவின் பிள்ளைகளாய் வாழ மனதில் மனமாற்றம் தேவை. மனம் மாறிய மனதில் மன்னிப்பு, மகிழ்வு, அமைதி உண்டு. பழைய நிலை மாறி புதுவாழ்வு பெற குழந்தை உள்ளம் தேவை.

## கிறிஸ்துவில் அவன்!

உலகில் பல்வேறு கொண்டாட்டங்கள், விழாக்கள் உண்டு. ஆனால் கிறிஸ்து பிறப்பு விழா மனமாற்றத்தின் விழா, அயலானை மன்னித்து ஆவியின் கனிகளாம் அன்பு, மகிழ்ச்சி, அமைதி... என்று ஆவி காட்டும் நெறியிலே நடக்க முயல்வோம் (கலா 5:22-25).

பரிசுத்தம், தூய்மை நிலவிட மனமாற்றம் தேவை. எனவே, கிறிஸ்து பிறப்பாய் புது வாழ்வு பெற்ற நாம் அயலானை மன்னித்து, அன்பைப் பொழிந்து, அடிமை என்னும் பாவநிலையில் இருந்து விடுபட்டு மறு கிறிஸ்துவாக அன்புமிகு சமுதாயத்தை உருவாக்குவோம். அதுதான் நாம் கொண்டாடும் கிறிஸ்துமஸ் கிறிஸ்துவின் அன்பை அகிலத்திற்கு அளித்து உண்மையான கிறித்தவ வாழ்வு வாழ்வோம்.

## மனம் மாறிட வழிகள்

மனம் மாறி பரிசுத்தமாய் வாழ ஊனியல்பின் நாட்டங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். இயேசுவை அணிந்து கொள்ளுங்கள் என்று அறிவுறுத்துகின்றது (உரோ 13:14). எனவே, புதுப்படைப்பாய் மாறி பாவத்திலிருந்து விழித்தெழுந்து, விண்ணையும், மண்ணையும் உண்டாக்கிய ஆண்டவரின் பிறப்பை போற்றிப் புகழும் வானதூதர்களோடு சேர்ந்து “மகிமை (Glory) நம் ஆண்டவருக்கே” என்று புகழ்பாடி மகிழ்வோம். “வாயில்களே உங்கள் நிலைகளை உயர்த்துங்கள்... மாட்சிமிகு மன்னர் உள்ளே நுழையட்டும்” (திபா 24:9-10) என நமது மனக்கதவைத் திறந்து, “எழுந்து பிரகாசி உன்னில் ஒளிவந்துள்ளது” (சொ 60:1) என்று இருள் அகற்றி இயேசுவின் ஒளி இயேசுவின் அன்பு அகிலத்தில் மலர நாம் உப்பாக, ஒளியாக வாழ்வோம். “நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். நீங்கள் உலகிற்கு ஒளி” (மத் 5:13-14). கிறிஸ்துவின் ஒளி நம்மில் சுடர்விட அன்புமிகு கிறித்தவ சமுதாயமாய் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையைக் கொண்டாடி மகிழ்வோம்.

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு பெருவிழா நல்வாழ்த்துகள்!

அன்புடன்

கமிலஸ்



# மன்னவன் எம்மில்

இறைமகன் இயேசு மானுடல் எடுத்து
மண்ணகம் வந்த நாள் – எம்
மனங்கள் மகிழ்ந்த நாள்

பாலன் பிறந்துள்ளான்
தேவ பாலன் பிறந்துள்ளான்
பாவிகள் எம்மை மீட்டிட
மானுடலில் எம் மன்னன் – எம்மில்
மீண்டும் பிறந்துள்ளான்

இன்பம் கொண்டுள்ளோம் – எம்
இல்ல துன்பம் துடைத்துள்ளோம்
அன்பில் என்றும் சங்கமிக்க – வாழ்வில்
எம்மை தந்துள்ளோம்
தூயவனை எம்மில் கொண்டுள்ளோம்.

தேவன் வந்துள்ளார்
தேவன் மைந்தன் பிறந்துள்ளார்
அன்பும் அமைதியும்
அவணியில் நிலைக்க
அகிலத்தை வென்றுள்ளார் – எம்மில்
அன்பை விதைத்துள்ளார்

இன்பம் பொங்க மன்னவன் பிறப்பை
இனிதே கொண்டாடுவோம். – இல்லங்களில்
இணைந்தே கொண்டாடுவோம்.



ராஜ்

*With Compliments and Best Wishes*

**Dr Rose Thanenthiran**

Doncaster East Family Medical Centre

116 Blackburn Road

Tel 03 9842 8585

Fax 03 9841 8798

**சின்ன சின்ன பாலனே**

சின்ன சின்ன பாலனே
சிரிக்கும் மலரே மழலையே
குளிரும் வளர் நிலவே – நாளும்
ஒளிரும் சுடர் கதிரே!
ராரோ ராரோ ஆராரோ (2)

விழி இரண்டின் கருணையினால்
வழி இருட்டும் மறைகின்றதே
தடம் மாறிடும் பாதங்கள் உன்னால்
இடர் நீங்கி நடை பயிலுதே!
ராரோ ராரோ ஆராரோ (2)

பஞ்சு கன்னத்தின் குழிதனிலே - என்
நெஞ்சம் மயங்கி மகிழ்கிறதே!
பிஞ்சு விரலை பற்றியே உன்னை
தஞ்சம் அடைந்தேன் சரணமே
ராரோ ராரோ ஆராரோ (2)

**சம்மனசு சகாயராஜ்**



# Christmas Poem

Christmas is the best,
Don't you think it's so blessed?
Wrapping gifts and cooking a lot of food,
Is it just me or is no one in the mood?

Inviting people over and giving gifts to each other…
NOT A SINGLE PERSON TAKES CARE OF MY BROTHER!!!
Christmas lights and the Christmas Tree,
Everyone would want to see it, even a Bee!

Now I Think you Know that everybody loves Santa, But…
Did you know that he loves Fanta?
Now Santa little helpers, The Elves are the Naughtiest,
But personally, I Just think they like shelves!

What is Christmas without Jesus Christ?
Love one another, Is what Jesus said,
It's all about love, not all the things.
The real joy, Is what the true Christmas brings.

By Aleisha Rajkumar (Y4)

# *Message of Christmas*

In the little Village of Bethlehem two thousand years ago child Jesus was born. For the Christians almighty God became a man by lowly humble birth. In that holy and beautiful night poor shepherds were still working in the fields and watching over their flocks of sheep. The angels visited the shepherds and announced the arrival of child Jesus. On that silent night the angels sang sweetly to the glory of God and wished PEACE to men of GOOD-WILL. These poor and humble shepherds went back with joy praising God. It was to these poor and simple men that Lord Jesus gave the opportunity to see him and worship Him!

Two thousand years ago these shepherds and angels have given us an important message. It was to the forgotten and poor shepherds the Birth of Jesus was first announced. It is those people who are poor in spirit who can see and experience God. On that Christmas Night the angels proclaimed the important message of PEACE.!

Our world is suffering from war and hatred. Peace can come only through GOOD-WILL. Good-will comes through love and understanding. Jesus said, "Blessed are the peace-makers; for they shall be called the children of God" Let us all be makers of Peace and become the children of God.!! Thank You.

**Sugi Canisius**

# New Year Mass

31st December 2023

@

10.30pm





*St Anthony's Catholic Church,*

45 Railway Pl, Alphington

**Car Park:**

**59 Austin St, Alphington**



**PARKING GUIDE**

Please use St Anthony's Primary School Parking and walk through to the St. Anthony Church.

